மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 16

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

தரம்: 11

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. கல்வி நலம் பெற்றனரேற் காரிகையர்.. இங்கு காரிகையர் என்பதன் பொருள்
   1. ஆண்கள் 2. பெண்கள் 3. குழந்தைகள் 4. சான்றோர்
02. “மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோருக்கும்” இங்கு மூடர் எனப்படுபவர்
   1. முதியோர் 2. அறிவிலிகள் 3. தீயோர் 4. நல்லோர்
03. “காட்டில் விடும் பூஜையைப் போல” இங்கு பூஜை எனப்படுவதன் பொருள் யாது
   1. பூ 2. ஞானி 3. பூனை 4. விலங்கு
04. “பீடுடைய கல்விநலம் பெற்ற” என்ற தொடரில் பீடு எனப்படுவது
   1. துன்பம் 2. பெருமை 3. இழிவு 4. தூய்மை
05. மங்கை தனக்கேற்ற மணவாளனோ புகல்வாய் இங்கு மணவாளன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1. மணமகன் 2. மணவதி 3. மணவாட்டி 4. மனைவி

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

01. “தேனோங்கு பூம்பொதும்பர் செறிந்து பசுந்தழை பரப்பி வானோங்கு
தேமாவில் வாழுமிளம் பைங்கிளியே”
1. பூம்பொதும்பர் என்றால் என்ன?
2. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் என்ன?

02. “கேட்டோர் நகைப்பதுவும் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய் பைந்தொடிபால் கிளத்தாய் பசுங்கிளியே”
1. கிஞ்சுகவாய் என்பதன் பொருள் என்ன?
2. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தினை பாடியவர் யார்?

03. “பெண்களுக்கு தம்பதியே தெய்வமென்பர் சிலர்
பெண்களுக்கும் அடிமைகட்கும் பேதமில்லை என்பர் சிலர்”
1. பதி என்பதன் பொருள் யாது?
2. அக்காலத்தில் பெண்கள் பற்றிக்கொண்டிருந்த கருத்தாக ஆசிரியர் எவற்றை குறிப்பிடுகின்றார்?

04. “சின்னப்பதுமை கொடு சிறார்செய் மணம்போலுமரோ
தெரிவையவட்கு இம்மாற்றம் சீர்க்கிளியே கூறுதியால்”
1. அக்கால மண முறை முறை பற்றி தலைவன் எவ்விதம் வருந்துகின்றான்?
2. இப்பாடலில் இடம்பெறும் அணியை குறிப்பிட்டு விளக்குக

05. “கூட்டில் பசுங்கிளிபோல் கோதையரை எப்பொழுதும்
வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக்கு யாது உரைப்போம்”
1. விரகிலர் என குறிப்பிடுவது யாரை?
2. விரகிலர் செயலாக காட்டப்படுவது யாது?

06. கன்னல் மொழி கேளாது கஞ்சமுகம் நோக்காது மண்ணிலத்து
வாழேன் மடிந்திடுவன். மங்கையர்க்கு மற்றிப்பழி”
1. தலைவனின் காதல் உணர்வு எவ்விதம் எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. இங்கு இடம்பெறும் அணியை குறிப்பிடுக